C

Q25:38·211 TV
N23
175450.

599

உ

திருச்சிற்றம்பலம்.

திருவோத்தூர்

# ஸ்ரீ இளமுலை யம்பிகை அந்தாதி.

OFFICE OF THE REGIS[TRAR]
23 JUL 1928
MADRAS

இது,

தஞ்சைக் கருந்திட்டைக்குடி
பண்டித வி. சாமிநாத பிள்ளையவர்கள்

இயற்றியது.

1928.

SOLDEN & CO.,
Madras.

Q25:38.211TV
N28
125450

.]    [*Price*: 2 *Annas*.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருவோத்தூர்

# ஸ்ரீ இளமுலை அம்பிகை அந்தாதி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JUL 1928
MADRAS

---

இது,

யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாணாக்கரும்,

தஞ்சை-S. P. G. காலேஜூ தமிழ்ப்பண்டிதருமாயிருந்த

ச. விசுவலிங்க பிள்ளையவர்கள் குமாரர் சேயாறு

போர்டு ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

**கருந்திட்டைக்குடி திருவாளர். வி. சாமிநாத பிள்ளையவர்கள்**

இயற்றி வெளியிட்டது.

---

**1928.**

சென்னை

சோல்டன் அண்டு கம்பெனி அச்சுச்சாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை அணா **2.**]　　　　[காப்பிரைட்.

-600 008.
125450

# முகவுரை.

A2538:211 N8

திருக்கோயில் சென்று தெரிசிக்குந்தோறும் ஸ்ரீ அம்பிகை சம்பந்தமாக ஓர் தோத்திரப் பிரபந்த மியற்ற வேண்டுமென்னும் எண்ணம் உதித்து வந்தது. வரவே நாடோறும் இலௌகிகத்தினின்றும் ஒழிந்த நேரங்களில் அம்பிகை அடிச்சிந்தனையோடு சிலசில செய்யுள்களாகப்பாடி இரண்டொரு திங்களில் இவ்வந்தாதித் தொடையலைத் தொடுத்து முடித்தேன்.

கற்றோரிடங்காட்டிக் கரிசுபோக்கிக்கொள்ளுங் கருத்தொடு இதனைத் தற்காலம் தண்டமிழ்ச் சாகரமும் வடமொழி வைப்பும், சுருதியமுதச் சொற்பொழிவாற்றுஞ் சுகுணக் கொண்டலுமாய் விளங்கும், திருக்கோவலூராதீனத்துத் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயத்துக் குருமூர்த்திகளா யெழுந்தருளியுள்ள ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளது திருச்சமுகஞ் சேர்ந்து காட்டினேன். சிவஞானபாநுவாகிய சுவாமிகள் திருக்கரத்தாற் றொட்டுத் திருக்கண்சாத்தி யருளிச் செவ்விதாக்கண்டு வாழ்த்து கவியுஞ் சாத்துகவியுந் தந்தருளப்பெற்றேன். இத்தகைய அவர்கள் திருக்கருணையை நான் ஒருபோது மறவேன்; காட்சிக்கெளிய கடுஞ்சொலற்ற கருணைக்களஞ்சியமாகிய அவ்வடிகள் மாட்டு அடியேன் வேறு என்ன செய்யமாட்டுவேன்.

யாவர்க்கும் பயன்படுமாறு செய்யுள்தோறும் இயன்றவரை அரும்பதவுரைக்குறிப்பு எழுதியுள்ளேன். பல காரணங்களால் இதில் பிழைகள் திருத்தமாய்த் திருத்தி அச்சிட முடியாமற்போயிற்று. அதனால் இதனோடு பிழை திருத்தஞ்சேர்த்திருக்கிறேன். அதன்படி அன்பர்கள் திருத்திக்கொள்வார்களாக. வேறு பிழைகள் காணப்பெறின் அடியேனுக்கு அறிவிக்குமாறு அறிஞரை வேண்டிக்கொள்ளுகிறேன். அதன்படி யடுத்த பதிப்பு வெளியிடுவேன்.

நிற்க, இதன் விற்பனையால் வரும் ஊதியத்தைக் கோயிலின் சந்நிதி மண்டபத்தில் என்னால் ஏற்றப்பெற்றுவரும் திருவிளக்குச் செலவின் முதற்றொகைக்காகச் சேர்க்கும் எண்ணத்தோடு இதற்கு ஒரு சிறு விலையிடலாயிற்று. அன்பர்கள் பெற்று இன்புறுவார்களாக.

இதனை அச்சிடத் திருவோத்தூர்க் கம்மாளர் தெருவிலிருக்கும் பையூர்ச் சபாபதியாசாரியார் குமாரர் திரு. P. S. குமாரசாமியாசாரியார் ரூபா இருபதும், சென்னைப் பெரியமெட்டு மெஸர்ஸ் சி. கல்யாணம் அண்டு கம்பெனியார் (Skin and Hides Merchants) ரூபா பதினைந்தும் கொடுத்தார்கள். அவர்கள் செய்த தருணவுதவிக்கு மிகுந்த நன்றியறிதலுடையேன். அவர்கள் எல்லா நலனுமெய்திப் பல்லாண்டு வாழப் பரமனருள்க.

எல்லாம் வல்ல இறையருள் என்முகமாகவுமிருந்திதனை யியற்றுவித்ததை எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் இறும்பூதெய்தாநிற்பேன். 'ஆட்டுவித்தா லாரொருவர் ஆடாதார்'?

என்றும் இறைவி இணையடிகளில் எனக்கு அன்பு மாறாதிருக்க வருளுமாறு அவளடியை அநவரதம் பணிதலையுடையேன்.

சுபம்! சுபம்!!

திருவோத்தூர்,<br>17-7-1928.

வி. சாமிநாத பிள்ளை.

# சாத்துகவி.

---

திருக்கோவலூ ராதீனம் திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீ ஞானியார் மடாலயத்துக்
குருமூர்த்திகளா யெழுந்தருளியுள்ள
ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்
அருளிச்செய்தது.

---

ஓத்தூ ரிளமுலையா ளொண்பொருள்சே ரந்தாதி
கோத்தான் முறைக்காங் குணங்களுடன்—பார்த்தபெரு
விற்பனர்க ளோகைகொளு மேற்கோ ளுடன்மிளிரச்
சற்குணன் சாமிநா தன்.

சாமிநா தப்பெயர்கொள் சற்குணனும் வாழியவே
தோமிலா வண்ணந் தொகுத்தநூல்—தாம
வளம்பல வற்றோடு வாழியவே யெத்தாய்
இளமுலையும் வாழிய வே.

---

சிவமயம்.

# திருவோத்தூர்த் தலவிநாயகர்கள்

## துதி.

* (ஒப்பிலாமணி விநாயகர்)

பாரார் திருவோத்தூர் பால குசாம்பிகைமேல்
நேராரந் தாதி நிகழ்த்திடவே—பேராரும்
ஒப்பிலா நன்மணியா மும்பன்முக னுற்றுதவுந்
தப்பிலாச் சொற்பொருள்கள் தந்து. (1)

¶ (காடு வெட்டி விநாயகர்)

சீரார் திருவோத்தூர் தேவி யிளமுலைதாட்
கேராரந் தாதி யெனுமாலை—நாரால்யான்
கட்டி யணியக் கருத்திருத்து வேன்காடு
வெட்டி விநாயகன்றாள் வீழ்ந்து. (2)

---

* இச்சந்நிதி கோயிலின் தெற்குமதிளோரமாகச் சேயாற்றின் கரையிலுள்ளது.

¶ இச்சந்நிதி திருவோத்தூர்த் தெற்கு வீதி மத்தியில் மேற்கு முகமாக உள்ளது.

மற்றொரு தலவிநாயகர் நிருத்தவிநாயகர். இவர் திருக்கோயிலுள்ளே கலியாண மண்டப மேடையிற் றிருவாயிலின் வலப்புறத்துள்ளவர். இவர் துதியே நூற்றுதியாவது—அது மேல்வரும்.

## திருவோத்தூர்த் திருக்கோயிற் குறிப்பு.




1. வேதபுரீசர். 2. இளமுலைநாயகி. 3. நிருத்தவிநாயகர். 4. திருநந்திதேவர். 5. திருக்குளம். 6. நூற்றுக்கான் மண்டபம். 7. நவக்கிரகம். கற்பனை மரம் (பூவும் காயும் உள்ளது) 8. தலத்து தால விருக்ஷம். 9. சேயாறு. 10. பஞ்சபூத இலிங்கங்கள்.

Solden & Co., Madras, S. E.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீ இளமுலை அம்பிகை அந்தாதி.

---

## நிருத்த விநாயகர் துதி.

### கட்டளைக்கலித்துறை.

திருத்திகழ் சோலை மலிதிரு வோத்தூர்ச் சிவபெருமான்
மருத்திகழ் கொன்றைப் புயந்தோ யிளமுலை மாதுமைதாட்
கருத்தியி னோர்தமி ழந்தாதி மாலை யணிந்திடவென்
கருத்தினி னிற்கு நிருத்த கணேசன் கழறுணையே.

மரு-வாசனை ; அருத்தி-அன்பு.

## நூல்.

சீருந் திருவுஞ் செகமெச் சியகல்விச் செல்வமுநற்
பேரும் புகழும் பெருவாழ்வு நாயேன் பெறவருள்வாய்
பாரும் விசும்பும் பணிதிரு வோத்தூர்ப் பரமர்பங்கில்
ஆருங் கருணை முகிலே யிளமுலை யம்பிகையே. (1)

பார்-பூமி. விசும்பு-ஆகாயம். (ஆகுபெயர்கள்). முகில்-மேகம்.

அம்போ ருகத்தடஞ் சூழ்திரு வோத்தூ ரரன்மகிழ்பொற்
கொம்பே திருமா மகளுங் கலைவாழ் குலமகளும்
வம்பேய் மலர்கொடு வந்துன் பதமலர் வாழ்த்துவரால்
எம்போ லியர்பிழை போக்கி யருள்செ யிளமுலையே. (2)

அம்போருகம்-தாமரை. தடம்-குளம். வம்பு-வாசனை.

இளமை தனஞ்சரீ ரம்மிவை யெல்லா மிருப்பதுபோற்
களவிற் றளர்விற் சமன்வரு காலிற் கழிந்திடுமென்
றளவில கேட்டு மவற்றிடை யாசை யறுத்திலனென்
றளவிகன் மூர லிளமுலைத் தாய்நீ தகவருளே. (3)

சமன்-யமன். கால்-காலம். தளவு-முல்லை. மூரல்-பல்.

அருளேய் மனத்தவர் வாழ்திரு வோத்தூரி னம்பிகையே
மருளே நிறைந்திடு வன்னெஞ்ச னேற்கு மதியருளி
யிருளேய் மலந்துமித் தென்ஞான்று முன்ற னிணையடிசேர்
தெருளே யருள வுனைவேண்டி னேனருள் சிற்டரையே. (4)

மருள்-அஞ்ஞானம். தெருள்-மெய்ஞ்ஞானம்.

சிற்பத் தொழிற்சிறப் பெல்லாந் திகழ்நின் றிருத்தளிக்கே
நிற்பத்த ரெல்லாந் தினம்வந் திறைஞ்சுத னேர்கண்டுமே
யற்பத் தனமுடை யானுனைப் போற்று தயர்குவனென்
கற்பத் தினுமழி யாமறை சைக்கரு ணாகரியே. (5)

திருத்தளி-திருக்கோயில். அயர்குவன்-தாமதிப்பன்.

கரியா னனனை மயில்வா கனனைக் கருவுறு தீந்
தரியா னமதாக் கொளுங்கன்னி மாலய னார்ககரிய
பெரியா னமர்திரு வோத்தூர்ப் பிராட்டிதன் பெய்கழலுட்
பரியாநின் றூரவ ரேபெறு வார்மேற் பதவியையே. (6)

கரி-யானை; ஆனனன்-முகன். அரி-சிம்மம்; யானம்-வாகனம்;
உள்-மனம். பரியாநின்றூர்-சுமக்கின்றவர்.

பதந்தந்து பாக்கியந் தந்து பகர்பர மானந்தமா
மிதந்தந் தெமையிரட் சித்தருள் வாய்நல் இளமுலையே
நிதந்தந்து நெய்யி னிலக்க நிறைவிளக் கேற்றிநிகழ்
மதந்தந்த வாணவ வல்லிருள் போக்கிடும் வன்மைதந்தே. ()

இதம்-நலம். தந்து-நூல் (தாமரை நூல்). இலக்கம்-இலட்சம்.

தேகந் தனைநிலை யென்றே நினைந்து செகத்திலலை
மோகந் தவிர்ந்துநின் மொய்கழற் கன்பு முதிரவெனக்

கேகந் தரவிடம் வைத்த பிரான்ற னெழிலிடமாம்
பாகந் தனில்வா ழிளமுலேத் தாய்நீ பரிந்தருளே. (8)

மோகம்-அதிவிருப்பு. கந்தரம்-கழுத்து. விடம்-விஷம்.

பரிவாக வந்தோர் முகம்பார்த் திரங்கிப் பகிர்ந்தளியா
தெரிவாய் நிரயம் புகுமா றிருந்தோ ரெனினுநின்றன்
திருவா ழடிமலர்க் கோர்மலர் சாத்தித் தினம்பணியிற்
பெருவாழ்வி னோடு பற்பல பேறு பெறுகுவரே. (9)

பரிவு-துன்பு. எரி-நெருப்பு; வாய்-நிறைந்த; நிரயம்-நரகம்.

வருந்தார் பிணியின் மக்தைச் வரியத்து மன்னுவர்காண்
திருந்தார் மதின்மூன் றெரித்தரு ளோத்தூர்ச் சிவனிடத்து
மருந்தா யுறையு மிளமுலே யம்மை மரைமலர்த்தாள்
பொருந்தார்வ மேவிட மூவாசை விட்ட புனிதர்களே. (10)

மகத் ஐச்வர்யம்-பெருஞ்செல்வம். ஆர்வம்-அன்பு.

கள்ளார் மலர்ப்பொழில் சூழ்திரு வோத்தூர்க் கருணையெம்பால்
விள்ளா விளமுலே யம்பிகை பாதம் விரும்பிலராய்
எள்ளா வலேந்துசிற் றின்பத் திறமாந் திருப்பரன்றோ
நள்ளா மிடிபிணி கல்லாமை யுற்று நவிகுவரே. (11)

கள்-தேன். பொழில்-சோலே. விள்ளா-நீங்காத. எள்ளா-இகழ்ந்து.

வருத்தும் பிணியால் வருந்தி மறந்து மனஞ்சுழன்று
கருத்துந் திரிந்துனே வந்து தொழாமற் கழிந்தனநாள்
அருத்துஞ் சுவையமு தன்ன விளமுலே யன்னேயென்னேத்
திருத்தும் பரமுனக் கேயன்றி யார்க்கருள் செய்குவையே. ()

பிணி-நோய். திரிந்து-மாறுபட்டு. பரம்-பொறுப்பு.

செய்ய வளேக்குலங் கண்டுசெங் கண்மால் திருக்கரத்துச்
செய்ய வளேவருந் தச்செயு மோத்தூரிற் செல்வியைநாஞ்
செய்ய வளேமரு வும்படி நோக்குந் திகம்பரியைச்
செய்ய வளேமன மேநினே சற்றென் றிகைப்பறவே. (13)

செய்ய-வயலிடத்த. வளே-சங்கு. செய்ய-நல்ல. வளே-சங்கு.

செய்யவளே-இலக்குமியை. வளேசெய்ய-வலம்வர.

திகைக்கும் வணங்கொடுங் கூற்றன் வரிலியான் செய்வதென்னே
உகைக்கும் விடையா ரூர்திரு வோத்தூ ருமையம்மையே
பகைக்கும் புலனைந்துஞ் சற்றேனு நன்னெறி பற்றிலபார்
நகைக்கும் வணம்பிறந் தேற்குநீ வீடு நயந்தருளே. (14)

கூற்றன்-யமன். உகைக்கும்-செலுத்தும்.
விடை-ரிஷபம். வீடு-முத்தி.

நயந்தந்த செம்மனத் தாலுனை நாடு நலமறியேன்
பயந்தந்த வாணவத் தான்மனங் கல்லாய்ப் பசைபற்றதால்
அயந்தந்த காந்த மெனவெனை யீர்த்து னடிமலராங்
கயந்தந்த தாமரைக் கீழ்வைப்பை யோத்தூர்முக் கண்ணம்மையே.

அயம்-இரும்பு. காந்தம்-இரும்பைக்கவர்வது (Magnet).
கயம்-குளம்.

கண்ணம்பு காதுவள் ளைத்தழை வாய்மொழி கண்டெனவே
வண்ணம் படப்புனைந் தேமட மாதரை வாழ்த்துமென்றன்
எண்ணம் படர்ந்தன தீர்ங்கழற் கன்பினி தெய்திடவே
வண்ணந் தியல்செய் திருவோத்தூர்த் தாய்நீ வரமருளே.

கண்டு-கற்கண்டு. வண்ணம்-அழகு.(வள்-நந்து-இயல்) செய்-வயல்.

வரிவைத்த வேல்விழி மாதர்க ளாசை வலைபிற்பட்டுக்
கிரிவைத்த வான்பொருள் போக்கிற்பீரொன்று கேண்மின்களே
கரிவைத்த தோலுரி வேத புரீசர்தங் காதலியார்
அரிவைத்த செஞ்சிலம் பாரடி சேர்மி னதுதருமே. (17)

வரி-இரேகை. கிரி-மலை. கரி-யானை. உரி-தோல். (பீமிசை)
அரி-பரல்.

தருமேவு புன்கைக் கயவர்க டம்மைத் தனதனென்றைந்
தருமேவு மிந்திர னென்னத் தமிழ்ப்பாத் தனிற்புகலு
தருமேத மெல்லாந் தவிர்த்திங் கழியாத் தனநிதமுந்
தருமே யிளமுலைத் தாயெழிற் பாதந் தலைக்கொண்மினே.

தரு-கட்டை. கயவர்-கீழ்மக்கள். தனதன்-குபேரன்.
ஐந்தரு-பஞ்சதரு. புகலுதரும்-சொல்லும்.
ஏதம்-பிழை. தரும்-தருவள்.

மின்னே ரிடைமாதர் தம்பால் விரும்பி விளைந்ததுன்பம்
என்னே பொறுக்கவற் றோதுயர் தீர்த்தின் னருள்செய்வையே
பொன்னே நவமணி யேயமு தேபுவி பூத்தவுந்தி
யன்னே திருமறை சைப்பதி யீச ரருந்துணையே. (19)

வற்றோ-முடிவதோ. நவம்-ஒன்பது. பூத்த-பெற்ற.
உந்தி-திருவயிறு.

துணையேது பூவி னினையன்றி யென்று துணிந்தபின்புங்
கணையேவு மன்மத வேள்வயப் பட்டுக் கருத்தழிந்து
பிணையேர் மடநோக் கியர்காம வின்பப் பிணிப்புறுதல்
இணையே யிலாத விளமுலை யம்மேயீ தென்பவமே. (20)

பூ-பூமி. கணை-அம்பு. பிணை-பெண்மான். பிணிப்பு-கட்டு.
இணை-ஒப்பு. பவம்-பாவம்.

பவக்கடல் வீழ்ந்து படுந்துயர் போக்கப் பதைபதைத்துத்
தவக்கல னேறுவர் நல்லோர் தமியேன் றகவினெஞ்சத்
தவக்கடல் வீழ்ந்திங் கழுந்துத னன்றோ வறிவளித்தாள்
சிவக்கலன் பூணடி யார்மிகு மோத்தூர்த் திகம்பரியே. (21)

பவக்கடல்-சென்மசாகரம். தவக்கலன்-தவமாகிய கப்பல்.
சிவக்கலன்-விபூதி ருத்திராக்கம்.

பரியுங் கரியு மிவர்ந்துபன் னூடு படைத்திகலும்
இரியும் படியர சாள்வோ ரெனினு மிளமுலையெங்
கிரியருள் புத்ரி பதம்பணி யாரெனிற் கீழ்நரக
வெரியதின் வீழ்குவ ராலவள் பாதங்க ளேத்துகவே. (22)

பரி-குதிரை. கரி-யானை. இரியும்படி-ஓடும்படி.
கிரி-(இம) மலை. எரி-தீ.

ஏவாத மக்க ளிணையிலாச் செல்வ மெழினிறைபிற்
றூவாத பெண்டிர் சனத்திரள் வாணாள் தளர்விலுடல்
மூவாத பேறுபெற் றோரெலா நின்னைமுன் னேதுதித்த
ஓவாத நல்வினை யுற்றோரன் றோமறை யூர்ப்பரையே. (23)

எழில்-அழகு. நிறை-கற்பு. தாவாத-தவறாத.
திரள்-கூட்டம். மூவாத-இறவாத.

பரையே பரனுர் தமக்குயி ராயவர் பங்கிலமர்
கரையே யிலாத கருணைக் கடலே கருதுமன்பர்
நிரையே நிறைதிரு வோத்தூ ரிருந்தரு ணின்மலையே
புரையே பொறுத்தெனை யாண்டருள் செய்வாய் பொதுக்கடிந்தே.

பங்கில்-பக்கத்தில். நிரை-கூட்டம். புரை-குற்றம்.

பொதுவினி லாடும் புனிதப் பிரானன்பு பூண்டமின்னே
கதுவிய நோயினே டின்மை முதற்பல காடுகளைந்
தெதுவிச னஃதினு நாம்வருந் தாதின் னருள்புரிந்தாள்
புதுவிது போலு முகமேவு மோத்தூர்ப் புனிதம்மையே.

பொது-அம்பலம். கதுவிய-நிரம்பிய. புதுவிது-புதிய சந்திரன்.

அம்மையிற் செய்த பிழைதவிர்த் தாண்டிங் கடியவனுன்
இம்மையிற் றீங்கெவை யுஞ்செயா வண்ண மியலறிவீந்
தும்மையி னற்கதி பெற்றிறு மாக்க வுவந்தருள்வாய்
எம்மை யினுமரு ளோத்தூ ரிளமுலை யென்னம்மையே. (26)

அம்மை-முற்பிறப்பு. இம்மை-இப்பிறப்பு. உம்மை-வருபிறப்பு.

என்றேய் தருமதி லோத்தூரி லெங்க ளிறைவியைப்பொற்
குன்றே வளைத்தருள் கோமான் றுணைவியைக் குற்றமெலாம்
நன்றே யெனக்கொண் டெமக்கருள் செய்கின்ற நாயகியை
யன்றே தினந்தொழு வேன்பிற தெய்வத்தை யாசிப்பனே.

என்று-சூரியன். எய்தரு-பொருந்தும். பொற்குன்று-மேருமலை.
ஆசிப்பனே-விரும்புவேனே.

ஆசு முதனுற் கவிவகை யோடவ தானமுமன்
பேசு திறலு மடியார்க ணண்புநின் பேரருளும்
மாசு திகழு மனமுடை யேற்கும் வருவதென்றோ
தேசு பொலிதிரு வோத்தூரின் மேவு சிவசத்தியே. (28)

ஆசு-ஓர்வகை கவி. அவதானம்-ஞாபகவிசேடம். திறல்-வலிமை.
மாசு-குற்றம். தேசு-பிரகாசம்.

சத்திய மீகை தயைபெரி யோர்தமைச் சார்தலொடிங்
கெத்திற நற்குண முஞ்சிறி தேனு மிலாவெனக்கும்

புத்திய தீந்துனைப் பாட வருள்செய் புரைதவிரெண்
சித்திகள் பெற்றோர் துதிதிருவோத்தூர்த் திரிபுரையே. ()

தயை-கிருபை. புரை-பிழை. எண் சித்தி-அட்டமாசித்தி.

திரிபுரை போக்கிய நல்லோர் பணியுந் திருமறைசைத்
திரிபுரை யம்பிகை பாத சரோருகஞ் சிந்தைவைத்தே
திரிபுரை மேவநிற் பீர்புல வீர்நறுந் தீந்தமிழ்சேர்
திரிபுரை மேவு யமக கவிநாளுஞ் செப்புமினே. (30)

திரி-மூன்று, புரை-குற்றம் (காமம், வெகுளி, மயக்கம்).
சரோருகம்-தாமரை, திரி-திரிகிற, புரை-உயர்வு. உரைமேவு
திரிபு (கவி) யமககவி-எனக்கூட்டுக.

செப்பாருங் கொங்கை மடவார் திறத்துத் திரிந்தலுத்த
விப்பாவி நெஞ்ச மொருகண மேனு மிளமுலைத்தா
யைப்பாவியாதென் னினிச்செய்வ நாமெரு மைப்பிடர்க்கண்
கைப்பாச சூலத் தெமராசன் வந்திடுங் காலத்தினே. (31)

செப்பு-சிமிழ். கணம்-க்ஷணம். பாவியா (த) தென்-
தியானித்திலாதவென். பிடர்-பிடரி.

காலும் புவியும் புனலுங் கனலுங் கடுவெளியும்
மேலும் நிறைந்த பராசத்தி நீயெனு மேன்மையையெக்
காலும் மறவா வரமெனக் கேயருள் வாய்கரிய
மாலும் பணிதிரு வோத்தூ ரிளமுலை மாணிக்கமே. (32)

கால்-காற்று. புவி-மண். புனல்-நீர். கனல்-தீ. வெளி-
ஆகாயம். மால்-விஷ்ணு.

மாணிக் கருள்செய வேவருங் காலன் வருந்தவுதைத்
தாணிக் கனகா லம்பலத் தாடு மரன்மகிழ
வாணிக் கவளுடை மாமிக் கிரங்கி வரமளித்துக்
காணிக்கை பெற்றிடு மோத்தூ ரமையெமைக் காத்தருளே.

மாணி-பிரமசாரி (மார்க்கண்டன்). காலன்-யமன். கனகம்-பொன்.
வாணி-சரசுவதி. அவள் மாமி-இலக்குமி.

காக்கின்ற மாலுட னுக்கு மயனுங் கடையிலெல்லாந்
தீர்க்கின்ற வீசனுந் தத்தந் தொழிலினைச் செய்வதெல்லாம்

வார்க்குங் குமதன மாதர் நடஞ்செய் வளமறைசை
யார்க்குஞ் சிலம்பணி யம்மை யிளமுலை யாளருளே. (34)

மால்-விஷ்ணு. அயன்-பிரமன். கடையில்-முடிவில். தீர்க்கின்ற-அழிக்கின்ற. வார்-கச்சு. தனம்-முலை. ஆர்க்கும்-ஒலிக்கும்.

ஆரா ரிருந்து மெனக்கென்ன நன்மைய தாக்குவர்வெந்
நீரா யினும்பொரு வென்னுடல் வீழி னெருப்பிவிட்டுப்
பேரா விருப்பரன் றேதிரு வோத்தூர்ப் பிராட்டியெனைப்
பாராய் சிறிதருள் பண்ணுப் பிறவாது பாரினிலே. (35)

ஆக்குவர்-செய்வர். பேராவிருப்பர்-திரும்பிவந்திருப்பர். பார்-பூமி.

பாரிடஞ் சூழப் பலிகொண் டிருந்துதன் பாதமலர்
சேரிடர் நீங்கிய வன்பர்க் கழியாத சீரளிக்குங்
கார்விட முண்டருள் ளோத்தூ ரிறைவர் கருத்துளமர்
ஆரமு தன்ன விளமுலைத் தாயெமை யாண்டருளே. (36

பாரிடம்-பூதகணம். பலி-பிச்சை. இடர்-துன்பம். கார்-கருமை.

ஆண்டவர் தென்றிரு வோத்தூ ரதனி லமர்விருப்பர்
பூண்டவ ரென்பு புலித்தோ லுடையர் புரமெரித்த
தாண்டவர் வேத புரீசர் தமதிடந் தங்கியெமக்
கீண்ட வருள்செ யிளமுலை பாத மிறைஞ்சுமினே. (37)

தென்-அழகு. புரம்-முப்புரம். தாண்டவர்-நடராசர். ஈண்ட-நிறைய.

மின்னுந் திருமுடி மேற்பிறை யோடு மிளிர்கடுக்கை
மன்னுஞ் சடைமுடி யோத்தூ ரிறைவர் மகிழ்துணைவி
யென்னு மமையுல கெல்லாம் புரக்கு மிளமுலைத்தாய்
இன்னும் படியிற் பிறந்திற வாம லினிதருளே. (38)

கடுக்கை-கொன்றை. படியில்-பூமியில். புரக்கும்-காக்கும். தாய்-விளி

இனியுந் துயர்வரு மோதிரு வோத்தூ ரிளமுலைநின்
கனியுங் கருணை முகமுங் கரத்திற் கருப்புவில்லும்
பனிசெய் கடுக்கை மலர்த்தோளுந் தாளும் பரிபுரமும்
உனியடி யேனிருப் பேனெந்த நேரத்து முள்ளத்தினே. (39)

கருப்புவில்-கரும்புவில். பனி-குளிர். கடுக்கை-கொன்றை. பரிபுரம்-சிலம்பு. உனி-நினைந்து.

உள்ளத்தி னூடு நினைத்துதிப் போமெனி லுற்றிடுமென்
கள்ளப் புலனைந்து மோர்வழி நின்றில காணறிஞர்
எள்ளப் பிறந்தே யிருந்தே னெனையுநி னின்னருளால்
மெள்ளப் புரந்தருள் வாய்திரு வோத்தூர் விளங்கம்மையே.

உள்ளம்-மனம். ஊடு-உள்ளே. எள்ள-இகழ. மெள்ள-மெல்ல

விளக்கி லழிகின்ற விட்டிலைப் போலயின் னூர்விழியா
மளக்கரில் வீழ்ந்தழி யாதடி யம்பி யளித்துமுத்தி
வளக்கரை சேர்த்தருள் வானவர் யாரும் வணங்கவரு
களக்கறை மேவிய வேத புரீசர்தங் காதலியே. (41)

விட்டில்-(பதங்கம்) ஓர்வகைப்பூச்சி. அளக்கர்-கடல்.
அம்பி-புணை. களம்-விஷம்.

காதலித் தேத்து மடியார் பழவினைக் காடெரிக்கும்
வேத புரீச்சுரர் தம்மிட மேவிய வித்தகிநின்
பாத கமலத் தினைவந்து பற்றினன் பட்சம்வைத்தென்
பாத கமலத் தினமாய்த் தினிதருள் பாலிப்பையே. (42)

வித்தகி-ஞானசொரூபி. பாத கமலம்-திருவடித்தாமரை.
பாதக மலம்-கொடிய ஆணவமல நோய்.

பாலத் திருவிழி யான்மதன் வேவப் பணித்தருள்கா
பாலத் திருநடஞ் செய்திரு வோத்தூர்ப் பரமருடன்
தாலத் திருநிழற் கீழ்வா ழிளமுலைத் தாயெனையித்
தாலத் திருவினை சாரா தருள்செய்து தாங்குவளே. (43)

பாலம்-நெற்றி. இரு-பெரிய. காபாலம்-ஓர் நடனம்,
தாலம்-பனை, தாலம்-பூமி.

தாங்குவ ளென்னையித் தாரணி தன்னிற் றளர்வுறச்செய்
தீங்குள யாவு மகற்றித் திருவினைச் சேர்த்துமகிழ்
தூங்குளத் தாற்றனை நாளுந் துதிக்கின்ற தூயவன்பு
ஓங்குறச் செய்வள் திருவோத்தூர் மேவு முமையம்மையே.

தாரணி-பூமி. திரு-செல்வம். தூங்கு-நிறைந்த.

உம்மையல் லாதெமக் கோர்கதி யின்றென் றுரைத்துரைத்து
நம்மையுண் டான பொழுதடுத் தேநலி வுற்றிடும்போ

தெம்மை யறியா ரெனவிடுத் தேகா வினத்தவர்கள்
தம்மை யடைந் திடச் செய்திரு வோத்தூரிற் சங்கரியே. (45)

கதி-புகலிடம். நலிவு-வறுமை. இனத்தவர்-உறவினர்.

சங்கக் குழையணி வேத புரீசர் தமக்கினிய
நங்கைக் கரசி யிளமுலை நாயகி நற்கழலிற்
றுங்கக் கவிபுனைந் தேழ்நான்கு கோடி துயர்நரக
பங்கக் குழியமுந் தாவணந் தப்புவிர் பாவலிரே. (46)

துங்கம்-பரிசுத்தம். ஏழ்நான்கு கோடி-இருபத்தெட்டுக்
கோடி. பங்கம்-சேறு.

பாவிப் பவர்தம தெண்ணப் படியே பரிந்துவந்து
சேவிப் பருளிடத் தோன்றுசிந் தாமணி பேசிறியேன்
ஆவிக் கலக்க ணுறுவணங் காத்தரு ளந்தகனுர்
மேவிக் கலக்கிடு வான்புகுந் தீர்க்குமவ் வேளையிலே. (47)

பாவிப்பவர்-தியானிப்பவர். பரிந்து-இரங்கி. சேவிப்பு-சேவை.
அலக்கண்-துன்பம். ஈர்க்கும்-இழுக்கும்.

அயிலே யனைய விழிமட வாரிடமாசைவைத்து
மயிலே குயிலே மடப்பிடி யேயென வாழ்த்துகைக்கே
பயிலே னினிப்பயில் வேன்றிரு வோத்தூர்ப் பராபரியின்
ஒயிலே றியபூந் திருவடி நெஞ்சினி லுன்னுதற்கே. (48)

அயில்-வேல். பிடி- பெண்யானை. பயில்-பழகு. ஒயில்-அழகு.

உன்னிட நின்னை யெனிலொரு கோடி யுறுகவலை
மன்னிடு மாலினி யென்செய்கு வேன்வள மாமறைசை
தன்னி லிருந்தருள் செய்பு மிளமுலைத் தாயடியேன்
பன்னிய கொண்டென் றனக்குந் திருவருள் பாலிப்பையே. ()

உன்னிட-தியானிக்க. கோடி-ஓர் எண். பன்னிய-கூறிய

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்க்குச்
சேலென் பதுவிழி செப்பென் பதுமுலை செங்கனிவாய்
நூலென் பதுமிடை யென்பேற் கிளமுலை நூபுரத்தன்
காலென் பதுபுணை சென்மக் கடற்கெனக் காட்டினளே. (50)

பாவையர்-பெண்கள். செம்கனி-கோவைப்பழம்.
நூபுரம்-சிலம்பு. புணை-தெப்பம்.

காட்டி லலைந்துங் கனலிடை நின்றுங் கருதுடலம்
வாட்டிய தாலென் பெறுவீ ரதைநனி மாமலரோன்
ஓட்டி விரந்துணு மோத்தூ ரிறைமகி ழுத்தமிநல்
வீட்டி விருந்துந் தனைநினை வார்க்கு விதிப்பளன்றே. (51)

கனல்-தீ. ஓடு-கபாலம். இறை-கடவுள். விதிப்பள்-பெறச்செய்பவள்.

விதிக்கும் விதிக்கு மரிக்கு மரிக்கும் வியன்சிரத்துப்
பதிக்கு மிணைத்தா ளிளமுலை யம்மை பகருஞ்சந்
நிதிக்கும் வருவார் திருப்பாத தூளி நினைப்பருஞ்சீர்க்
கதிக்கு முதிக்கும் வினைக்கு மருந்தாங் கருதுநெஞ்சே. (52)

விதிக்கும்விதி-படைக்கும்பிரம்மன். அரி-திருமால். அரி-இந்திரன்
மரிக்கும்-இறக்கும் or ஸ்மரிச்கும், அரிக்கும்-விண்டுவுக்கும்.

கருதாதை யோபல காலங் கழித்தனன் காணினிமேல்
வருதாதை யோடருந் தாயர்க் கெலாம்வரு வாதையற
மருதாதை யோவா மலர்ப்பொழி லோத்தூர் மகேச்வரிபி
னிருதாதை யோசை யிடுநூ புரச்சீ ரெழிலடியே. (53)

(கருதாது ஐயோ) தாதை-தந்தை. வாதை-வருத்தம். மரு-வாசனை
தாது-மகரந்தம். நூபுரம்-சிலம்பு. ஐ-அழகு. ஓவா-நீங்காத.
தா-தை-ஓசை—ஒலிக்குறிப்பு.

அடியே மிடர்கள் களைந்தாண் டருளு மருமறைசைப்
படியேழ் புரக்கு மிளமுலை யம்மை பதம்பணிவார்க்
கிடியே றெனவொலி செய்கரு மேதி யிவர்ந்துவென்றிக்
கொடியே றிடவரு மேமனு லென்ன குறைவருமே. (54)

இடர்-துன்பம். களைந்து-போக்கி. படிஎழ்-எழுலகு.
இடியேறு-பேரிடி. மேதி-எருமைக்கடா.

குறைநமக் கேது மினியுமுண் டோசொல் குளிர்புனற்சேய்
நிறைநதி மூழ்கி யதன்கரை மேவு நெடுந்தளியுட்
பிறைமுடி வைத்தருள் வேத புரீசர் பிராட்டியடி
நறைமலர் கொண்டுநெஞ் சேயருச் சித்தற்கு நண்ணுவையே.

சேய்நதி-சேயாறு. தளி-கோவில். நறை-தேன்.
நண்ணுவை-அடைகுவை.

800 609 125450

நண்ணுங் கவலை யொருகோடி யுற்று நலிவதெல்லாம்
விண்ணும் பரவு மகிற்றிரு வேத்தூர் விமலைபடி
எண்ணும் பரிசின்றி யேந்திழை யார்த மிணைவிழிசொல்
பண்ணுங் கயலு மெனவே திரிதரு பாவநெஞ்சே. (56)

நலிவது-வருந்துதல். விண்-தேவுலகம். பரிசு-தன்மை. பண்-இசை.

பாவத் தினையெந்த நாளுஞ் செயாது பகர்நரக
தாவத் தினைத்தப்பு வீர்கிருத் தாலத் தருநிழற்கீழ்
ஆவத் தினையே யகற்றிடு மோத்தூ ரமையடியை
மேவத் தினைத்தனைப் போதேனு நெஞ்சில் விரும்புவிரே. ()

தாவம்-தாபம். தாலத்தரு-பனைமரம். ஆவத்தினை-ஆபத்தினை.

அமை-அம்மை. மேவ-விரும்ப. தினைத்தனை-தினையளவு.

விரும்பாத கன்னெஞ்சன் வீணன் வெகுளி மிகமுரடன்
பெரும்பா தகனிவ னென்றே திருவுளம் பேணியருள்
அரும்பா தகல விடேலெனை யோத்தூ ரமலையென்னெஞ்
சிரும்பா தகவிலை சற்றேனு மோர்கா விளகிடுமே. (58)

வெகுளி-கோபி. திருவுளம்பேணி-எண்ணி. தகவிலை-

பரவாயில்லை. ஓர்கால்-ஒருசமயம்.

இட்டார் பெரிய ரிடாதா ரிழிகுலத் தாரெனவே
பட்டாங்கு கூறுதல் கண்டிருந் தும்பிறப் பாற்பலரைக்
கெட்டா ரிழிந்தோ ரெனுமதி யெற்குக் கெடுத்தருள்செய்
சிட்டாய சிட்டர் தொழுந்திரு வோத்தூர்ச் சிவகாமியே. ()

பட்டாங்கு-தர்மசாத்திரம் (நீதிநூல்). சிஷ்டர்-பெரியோர்.

சிஷ்டம்-மேன்மை.

சிவமே பரம்பொரு ளென்றே மறைகள் தெளிவுடனே
தவநேசத் தானனி சாற்றவும் வீணர்க டாந்தருக்கி
யவமே பிறந்திறக் குஞ்சில தேவரை யாதரிப்பார்
பவமே யகற்றிநல் வாழ்வரு ளோத்தூரிற் பண்ணவியே. ()

மறை-வேதம். தவ-மிக. தருக்கி-அகங்கரித்து. பவம்-பாவம்.

பண்ணார் தருதமிழ்ச் சம்பந்தர் பாட்டாண் பனையினைக்காய்
பெண்ணாக் கியதிரு வோத்தூர்ப் பிராட்டியிப் பேருலகில்

எண்ணுன் கறமும் வளர்த்திரட் சித்த விளமுலைத்தாய்
மண்ணார் தருதுயர் தீர்த்தெளி யேனையும் வாழ்விப்பளே. ()

எண்நான்குஅறம்-முப்பத்திரண்டு தருமம். ஆர்தரு-பொருந்திய. துயர்-பிறவித்துன்பம்.

வாழ்விப்பை யோவினி மேலிந்த மண்மேல் வருபிறப்பில்
ஆழ்விப்பை யோவினை சூழ்விட்பை யோவறி யேனடியிற்
ருழ்விப்பை யோத்தூ ரமரு மிளமுலைத் தாயெனைநீ
வீழ்விப்பை யோநர கத்துநின் பாதம் விழைந்தபின்பே. ()

தாழ்விப்பை-வணங்கும்படியருளுவை. விழைந்த-விரும்பிய.

பின்னிய செஞ்சடை யோத்தூ ரிறைவர் பிராட்டியொடு
மன்னிய கோலந் தனைக்கண் டுளத்தின் மகிழ்வதற்கே
முன்னளி யேஞ்செய் தவமெனைத் தோமுழு மூடநெஞ்சே
யென்னினி நீவிட யத்திடை யிச்சைவைத் தேகுவதே. (63)

கோலம்-காட்சி. எனைத்தோ-எவ்வளவோ. விடயம்-சிற்றின்பம்.

ஏகின காலம் பலவிரு தாவி னெழின்மடவார்
நாகிளம் பூக நிகர்தோ ணலநச்சி நாமினிமேல்
மாகமும் போற்ற வருதிரு வோத்தூர் மதிற்றளிக்குள்
நாக மளித்தரு ணங்கை பதத்துணை நாடுவமே. (64)

விருதா-வீண். நாகுஇளம்-அதிஇளமை (மீமிசை). பூகம்-கமுகு. நச்சி-விரும்பி. மாகம்-தேவருலகம். நாகம்-மலை (இமயமலை).

நாடுவ நாமினி யோத்தூ ரிளமுலை நற்கழலைச்
சூடுவஞ் சென்னி யவள்புகழ் தன்னைத் துதிதமிழிற்
பாடுவ மாங்கே பணிவிடை செய்கின்ற பத்தரினங்
கூடுவங் கூடி யவர்பாத தூளிமேற் கொள்ளுவமே. (65)

சென்னி-தலை. பணிவிடை-கோயிற்றிருப்பணி. பத்தர்-அன்பர். பாததூளி-அடிப்பொடி.

கொள்ளும் புனனிறை சேயா றதன்கரைக் கோயில்கொண்டிங்
கெள்ளும் பிறவி யெமக்கறுத் தேநல மெய்துவிக்க

நள்ளுந் திருவருட் பால குசாம்பிகை நற்கழலை
யுள்ளுந் தவமுண் டெனின்மேற் பிறப்பது முத்தமமே.(66)

எள்ளும்-இகழ்தக்க. நள்ளும்-விரும்பும். பால குச அம்பிகை-இளமுலையம்மை. உள்ளும்-நினையும். உத்தமம்-சிலாக்கியம்.

உத்தமர் வாழ்திரு வோத்தூர் புரக்கு முமையம்மையே
மெத்தவு நாயே னிளைத்தேன் பலசென்ம மேவியுன்றன்
சித்தமுஞ் சற்றே யிரங்கி யருணனி செய்திடுவாய்
நித்தமு நின்பத நெஞ்சிற் றுதிக்கின்ற நேர்மைதந்தே. (67)

புரக்கும்-காக்கும். மெத்தவும்-மிகவும். சென்மம்-பிறவி. மேவி-எடுத்து. நேர்மை-தன்மை.

தந்தே யனைய விடையார்தம் மால்வரு தாபமதால்
நொந்தே னெனையு நினதடி போற்று நுவலருஞ்சீர்
வந்தே தொழும்பரி சீந்தினி யாள்திரு மாமறைசை
இந்தே புனைசடை யெம்மா னிடமேவு மென்னம்மையே. ()

தந்து-நூல். இடையார்-அரையையுடையமாதர். தாபம்-துன்பம். நுவலரும்-சொல்லமுடியாத. இந்து-சந்திரன்.

என்னைநின் ருட்பணி செய்யுநல் வாழ்வி லிருத்திலையேற்
பின்னையு மாரெனைக் காப்பவ ரோத்தூர்ப் பிராட்டியெனக்
குன்னையல் லாலொரு நற்றுணை யுண்டோ வுறுதமியேற்
கன்னை யினும்பரி வுள்ளவ ளேயெனை யாதரியே. (69)

பணி-குற்றேவல். பரிவு-அன்பு. ஆதரி-இரட்சி.

ஆதரிப் பாரினி யாரிவ ணென்னை யகிலமிசைப்
பூதர மேவில் லெனக்கொண் டவுணர் புரமெரித்த
மாதவன் வேத புரீச னிடத்தமர் மாதங்கியே
பாத மடைந்தனன் வாழ்விப் பதுவுநின் பாரமம்மே. (70)

அகிலம்-உலகம். பூதரம்-மலை. பாரம்-பொறுப்பு.

பார மெனப்புவிக் கேயிருப் பேனைப் பரிந்தருள்சொற்
சார நிறைந்திடு நூற்கேள்வி யுள்ளத்துச் சாரவைத்துப்
பேரற நன்னெறி பேணிட நின்றிருப் பேர்நினைய
ஆரருள் தந்திடு வாய்திரு வோத்தூ ரமரம்மையே. (71)

பாரம்-சுமை. பரிந்து-இரங்கி. சார-நிறைய.

மையார் பொழிற்றிரு வோத்தூ ரமரு மலைமகளே
நையா வணமினி நாயேனைக் காத்துனை நாடுமனம்
மெய்யா வடைந்திட நீசெய் திருவுளம் வேறுபடில்
உய்யா தொழிவே னிளமுலை யம்மே யுவந்தருளே. (72)

மை-மேகம். மலைமகள்-பர்வதபுத்ரி-(பார்வதி).
நையா-வருந்தா. நாடு-விரும்பு.

உவரிப் புனலுறு தாகந் தணிக்க வுதவிடுமோ
சுவரிற் படுசித் திரம்பேசு மோவித் தொடக்கறநிற்
பவர்சூழ் தருதிரு வோத்தூ ரிளமுலை பாதம்விடுத்
தெவர்காண் பிழைப்பர் விடயா தியின்மிக விச்சைவைத்தே.

உவரி-கடல். புனல்-நீர். சித்திரம்-ஓவியம். தொடக்கு-பந்தம்.

தேனே திருவே தெவிட்டா வமுதே திகழுமுக்கண்
மானே பிணிக்கு மருந்தே மதிப்பவர் மாமனத்துத்
தானே முளைக்குந் தனிமுத லேயென் றனைப்புரப்பாய்
வானே வணங்க வருதிரு வோத்தூரில் வாழும்மையே. (74)

திரு-செல்வம். அமுது-சாவா மருந்து. வான்-ஆகாயம்
(தேவருக்கு ஆகுபெயர்).

வாழினு நான்மிகு செல்வத்தி னன்றி வறுமையினுற்
றூழினு நோய்முத லானவை தம்மாற் றளர்ந்துடலம்
வீழினு நின்றிருப் பாதம் விடேன்மனம் வேறெதையுஞ்
சூழினு நீதடுத் தாள்திரு வோத்தூரிற் சுந்தரியே. (75)

உடலம்-சரீரம். சூழினும்-நினைந்தாலும்.

சுந்தரி கௌரி சுகரூபி வாராகி தொன்மறையூ
ரந்தரி வாமி யபிராமி காளி யயனையருள்
நந்தரி சோதரி நாரா யணிவிட நண்ணியசீர்க்
கந்தரி சூலி கபாலி திரிநேத்ரி காப்பெமக்கே. (76)

நந்து அரி-சங்கு (தாங்கிய) திருமால். சோதரி-சகோதரி.
கந்தரி-கழுத்தி. திரி-மூன்று. நேத்ரி-கண்ணி.

காரணி நித்திய கல்யாணி யாருங் கருதரிய
ஆரணி யெங்க ளகிலாண்ட நாயகி யண்டநிறை

பூரணி முப்புவ னேச்வரி வேத புரிமருவு
நாரணி யம்மை யிளமுலை பாத நமக்கரணே. (77)

ஆரணி-வேத சொரூபி. அண்டம்-உலகம். பூரணி-நிறைந்தவள்.
அரண்-காவல்.

அரணமக் காக விருந்தரு ளோத்தூ ரமலையெழிற்
சரண கமலங்க ளுவகஞ் சென்னி தமிலிருத்தி
யிரண மெவையுங் கெடுத்தின்ப வாரி யினிற்படிவம்
மரண சனன மயக்க மிலாப்பெரு வாழ்வடைந்தே. (78)

அரண்-காவல். சரண கமலம்-திருவடித்தாமரை.
இன்பவாரி-சுகக்கடல். படிவம்-மூழ்குவம்.

வாயாப் பொருள்பல வற்றினு மேன்மேல் வளரும்இச்சை
யாயாப் புரைமன மெற்கெந்த நாளி லடங்குறுமோ
தாயா கியநின் றிருவடிப் போதினிற் றண்மலர்தூய்
ஓயாப் பிறவி யொழித்திட லென்றேவோத் தூருமையே. ()

வாயா-கிட்டாத. புரை-குற்றம். எற்கு-எனக்கு. போது-மலர்.

உமையே யுலக மெலாமுத ரத்தினி லுற்றுதவு
மமையே யணிதிரு வோத்தூ ரிளமுலை யம்பிகையே
கமையே மிகுந்த மனத்தடி யார்தங் கணத்தெளிய
வெமையே யியைத்துநல் வாழ்வளித் தாண்டிடி லென்குறையே.()

உதரத்தினில்-வயிற்றினில். உற்று-வைத்து. உதவு-பெறும்.
அமை-அம்மை. கமை-பொறுமை. கணம்-கூட்டம்.

குறையா வளமிகு மோத்தூ ரிளமுலைக் கோமளமே
நறையா ரிதழி முடிவேத புரீசர்தம் நாயகியே
தறையார் பிறவி தனில்வந்து வந்து சலித்தனன்மேல்
இறையா யினும்பொறுக் கேனினி யென்னையு மேன்றுகொள்ளே.

கோமளம்-பேரழகு. நறை-தேன். சலித்தனன்-அலுத்தேன்.
இறையாயினும்-சிறிதேனும்.

என்ற சிவனடி யார்க்கிடை யூறிங் கிழைசமண்முள்
நான்று கொளத்திரு வேடு கனலி னதியினெதிர்

தோன்றுறப் பாடலப் பிள்ளைக் கருளிய தொன்மறைசை
ஈன்றவ ளென்னையு மின்னற் கடற்கரை யேற்றுவளே. (82)

முள்-கழு முள். நான்றுகொளல்-தொங்குதல். கனல்-தீ.
இன்னல்-துன்பம்.

வளையார் கரத்து மதியார் முகத்து வநிதையர்க்காய்
விளையாத கேடு விளைவித் திடாய்மன மேமறைசைக்
கிளையார் தருப்பொழிற் றலத் திருநிழற் கீழமரும்
முளையார் முறுவ விளமுலை பாதங்கள் முன்னுவையே. (83)

வளை-வளையல். கரம்-கை. மதி-சந்திரன். வனிதை-பெண்.
முறுவல்-பல்.

முன்னம் பலப்பல சென்ம மெடுத்து முடிந்திலதே
இன்னம் பிறக்கவு மேயிருக் கின்றனை யேழைநெஞ்சே
அன்னம் பயில்வய லோத்தூ ரிளமுலை யம்பிகையின்
வன்னம் படுதிருப் பாதாம் புயங்கள் வழுத்துவையே. (84)

ஏழை நெஞ்சு-அறிவில்லாத மனம். வன்னம்-நிறம்.
அம்புயம்-தாமரை.

வழுத்திட நாவும் வணங்கிடச் சென்னியு மாணெழுத்தஞ்
சழுத்திட நீயு மணிந்திட நீறுமுண் டஞ்சனெஞ்சே
புழுத்திர ளூனுடல் போக்கி யழியாப் புனிதமுத்தி
பழுத்திட வுண்டு திருவோத் தூருமை பாதங்களே. (85)

சென்னி-சிரம். எழுத்தஞ்சு-பஞ்சாக்கரம்.
புனிதம்-தூய்மை. முத்தி-வீடு.

பாதந் துணைபற் றியதொண்ட மாற்குப் பரிந்துநந்தி
நாதன் றிரும்பி யிருப்பனீ சென்றவ னூற்களத்தி
லேதந் தரும்விசு வாவசு தன்னை யெதிர்த்தழியென்
றோத வுவந்த விளமுலை பாத முயிர்த்துணையே. (86)

பரிந்து-இரங்கி. களம்-போர்க்களம். ஏதம்-துன்பம்.

உயிருக் குறுதி யினைநாளு நாடா துழுதுவிதை
பயிருக் கிறையாது பாழுக் கிறைக்குமப் பான்மையரின்

அயிருக் கிணையா மொழிமட வாரிட மாசைவைத்துன்
செயிருக் கிலக்காக் கிடாதெனை யாள்மறை யூர்த்திருவே. ()

பாழ்-வறுநிலம். அயிர்-சருக்கரை. செயிர்-கோபம்.
மறையூர்-வேதபுரி.

திருவுற்ற நின்னிரு சேவடிப் போதிற் றினம்பணிந்தென்
கருவுற்ற துன்பப் பிணிபோக்கிக் கொள்ளுங் கருத்திலனாய்
மருவுற்ற பெண்பொன் புவியிவற் றுன்மிகும் வாஞ்சைகொண்டு
வெருவுற் றிலன்றுயர்க் கோத்தூ ருமையென் வினைப்பயனே.

கரு-சனனம். வாஞ்சை-ஆசை. வெருவுற்றிலன்-அஞ்சிலன்.

வினையே வினையின் விளைவே யவற்றின் வினைமுதலே
நினையே நினைந்து தினந்தொழு வேன்றுயர் நீக்குகண்டாய்
நனையோ சனைகம ழுற்பல வாவிசூழ் நான்மறையூர்ப்
பனையே தருநிழற் கீழம ரெங்கள் பராசத்தியே. (89)

நனை-அரும்பு. யோசனை-ஓரளவு தூரம்
உற்பலம்-குவளை. வாவி-குளம்.

பராசத்தி யம்பிகை யோத்தூ ரிளமுலைப் பண்ணவிதன்
தராதல மெல்லாம் பணிதிருத் தாளிணைச் சார்ந்தநமக்
கிராதவின் பங்க ளவையுண்டு நெஞ்சே யிரங்கலினி
வராத பெருவாழ்வு வந்துற்ற தென்று மகிழுவையே. (90)

தராதலம்-பூமி. இரங்கல்-வருந்தாதை. (வந்துற்றது-
என்றும்-மகிழுவை).

வையார் தருமூ விலைச்சூல மேந்தி மருவலர்தம்
மெய்யாவி போக்கியடைந்தோர்க்கருள்செய் விமலையென்றும்
பொய்யாத வன்பர் தொழுந்திரு வோத்தூர் புரப்பவளென்
கையார் பணிகொண்டு காறலை வைத்துக் கடாட்சிப்பளே. ()

வை-கூர்மை. மருவலர்-பகைவர். மெய்-சரீரம்.
ஆவி-உயிர். காறலை-கால் தலை.

கடாமிசை யேறி வருமந்த கன்றூன் கலங்கவெனை
யடாவெனக் கூவி யலைத்தீர்த் தேகு மமையத்திலே

படாத பாடு படாவண மோத்தூர்ப் பயிரவிநீ
விடாதெனை யாண்டருள் வாய்தவிப் பேன்கை விடிலம்மையே
அந்தகன்-யமன். அமையம்-சமையம். தவிப்பேன்-தத்தளிப்பேன்.

விடியா விருளா ணவம்போக்கத் தோன்று விளக்கமதி
முடியா ருயிர்த்துணை வேதாந்த மூல முழுமுதனல்
அடியா ருளத்தூ றமுதப் பெருக்களி யேற்கருளுங்
கடியார் மலர்ப்பொழி லோத்தூ ரிளமுலைக் கற்பகமே. (93)
விளக்கம்-தீபம். மதி முடியார்-சந்திரமோலீசுரர்.
பெருக்கு பிரவாகம். கடி-வாசனை.

கற்பகஞ் சிந்தா மணிகாம தேனு கடுப்பரென
வற்பரை நாளு நவகவி பாடி யலுத்திடுவீர்
விற்பன மிக்க கவிப்புல வீர்மறை யூர்விளங்குஞ்
சிற்பரை யெங்க ளிளமுலை சேவடி சிந்திப்பிரே. (94)
கடுப்பர்-நிகர்ப்பர். நவம்-புதுமை. விற்பனம்-அறிவுடைமை.

சிந்தைக் கினிக்கு நறுந்தே னெவர்க்குந் தெரிவரிய
முந்தைத் தனிப்பொருள் முக்க ணரற்கு மொழிவிருந்து
பந்தப் பிணிக்கு மருந்தா ணவவிருள் பாற்றுசுடர்
புந்திக் கொளிதரு கர்ப்பூர தீப மறைசை புரப்பவளே. (95)
நறுந்தேன்-நல்லதேன். பந்தம்-வினைத்தொடர்பு. சுடர்-சோதி.
சூரியனுமாம். புந்தி-அறிவு.

புரப்பவ ளோத்தூர் பொறுப்பவ ளென்பிழை பொங்குமருள்
சுரப்பவ ளுளுந் தனதடி யார்க்குச் சுருதிதனிற்
கரப்பவ டன்னைக் கரவா தளிக்கக் கனநிதியம்
நிரப்புவ ளன்னை யிளமுலை பாத நினைப்பவர்க்கே. (96)
சுருதி-வேதம். கரப்பவள் ஒளிப்பவள். கனநிதியம்-மிகுசெல்வம்.

நினைய வரிய பரம்பொரு ளாய நிமலையென்னெஞ்
சினையவள் பாதந் தனினிலை நிற்க வெனப்பணித்துப்
பனையதின் கீழிருந் தாண்டுகொண் டின்பப் பயோததியுள்
எனையமிழ்ந் தாட வருளுவ ளோத்தூ ரிருந்தவளே. (97)
பயோததி-சமுத்திரம். ஆட-மூழ்கித்திளைக்க.

இருந்தவஞ் செய்தில னேற்றூர்க் களித்தில னேதமெலாம்
பொருந்தவஞ்செய்குவன் போற்றேனடியரைப்பொய்கள்சொல்லி
யிருந்தவ னுயே னினியுய்யு மாறென் னிசைத்தருள்சீர்
தருந்தவ ராசேச் வரியே மறைசைத் தயாபரியே. (98)

இரும்தவம்-பெருந்தவம். எற்றூர்-யாசகர். ஏதம்-குற்றம்.
அவம்-வீண் செயல். (பயனில் செயல்).

தயவுட னென்னையு மாண்டருள் செய்யுந் தனிமறைசை
யியலுறு சீரெழி லம்பிகை பாத விணைமலரென்
மயலுறு நெஞ்சத் தடத்து மலர மகிழ்ந்தடியேன்
செயலுறு புண்ணிய மென்னையோ முன்பல சென்மத்திலே.

தனி-ஒப்பற்ற. இயல்-நல்லிலக்கணம். மயல்-மயக்கம். தடம்-தடாகம்.

மத்த மணிந்தவர் தங்கயி லாயமும் வான்மறைசை
யுத்தம நற்றளி யுந்திருத் தில்லையு மோங்குமன்பி
னித்த மிறைஞ்சிடும் வானோர் முடியு நிகர்ப்பவென்றன்
சித்தமுங் கோயில்கொண் டாண்ட இளமுலை சீர்க்கழலே.()

மத்தம்-ஊமத்தம்பூ. தளி-கோயில். தில்லை-சிதம்பரம்.
முடி-தலை. கழல்-திருவடி.

---

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ திருவோத்தூர் இளமுலை யம்பிகை யந்தாதி
இனிது முற்றிற்று.

---

# பிழை திருத்தம்.

| இடம் பக்கம் முதலியன. | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| அட்டை (Title) | 7 | கருந்திட்டைகுடி | கருந்திட்டைக்குடி |
| சாத்துகவி (பக்-1) | 1 | சாத்துகவி | உ |
| ஷை | 2 | ——— | .... .... .... |
| ஷை | 7 | அருளிச்செய்தது | அருளிச்செய்தவை |
| ஷை | 8 | ——— | சாத்துகவி |
| ஷை | 12-க்குக் கீழ் | .... .... .... | வாழ்த்துகவி |
| தலவிநாயகர் துதி | 6 | திருவோத்தூர் பால | திருவோத்தூர்ப் பால |
| ஷை | 11 | திருவோத்தூர் தேவி | திருவோத்தூர்த் தேவி |
| ஷை | 18 | மேற்கு | வடக்கு |
| திருக்கோயிற் குறிப்பு. | 4 | இளேமுலைநாயகி | இளமுலைநாயகி |
| ஷை | 6 | தலத்து | தலத்துத் |
| பக்கம்-7 (செ-12) | 20 | மனஞ்சுழன்று | மனஞ்சுழன்று |
| ஷை-11 (செ-31) | 16 | பாவியா (த)தென் | பாவியாது. என் |
| ஷை-ஷை.ஷை | 17 | தியானத்திலாததென் | தியானியாது. என் |
| ஷை-ஷை-ஷை | 25 | கனகா | கனகாு |
| பக்கம்-15 (செ-54) | 23 | மேமனு | கூற்றினு |

600 008.
125450
925:38:211V N28

## இந்நூலாசிரியர் இயற்றிய நூல்களும் அவை கிடைக்குமிடமும்.

---

| | ரூ | அ | பை. |
|---|---|---|---|
| திருவோத்தூர் இளமுலையம்பிகையந்தாதி | 0 | 2 | 0 |
| திருநாகை நான்மணிமாலை | 0 | 2 | 0 |
| திருவோகப்பதிகம் | 0 | 1 | 0 |
| திருவோத்தூர் மாரியம்மன் பதிகம் | 0 | 0 | 6 |
| திருவிளையாடல்வெண்பா (வன்னியுங்கிணறும் இலிங்கமும் அழைத்தது) | 0 | 1 | 0 |
| மாறனார் (வசனநூல்) அச்சில் | | | |
| நீதிநெறி விளக்க உரை | 0 | 8 | 0 |
| திருக்குற ணீதித்திரட்டு (அச்சில்) | 0 | 1 | 0 |
| இராஜபக்தி (வியாசம்) | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:—

வி. சாமிநாதபிள்ளை,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்,
போர்டு ஐஸ்கூல்,
திருவத்திபுரம்.

௳

கோபால் அண்டு கோ,
திருவத்திபுரம்,
வ. ஆ. ஜில்லா.

98
16 г. 101